சுற்றுநிரூப இல. 02/01

எனது இல. என்சுபி/கிழ/பொது-02.
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.
25.07.2001.

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள
சகல கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்களுக்குமிடு

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவுப் பணியாளர்களுக்கு மாதாந்த
இடைக்காலப்படி வழங்குதல்

---

மேற்படி விடயம் தொடர்பாக வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்ட 18.09.2000ந் திகதிய 50/2000 இலக்க சுற்று நிருபத்தின் 5ம் பந்திக்கு தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

இப்பந்தியில் 31/99 இலக்க சுற்றுநிருபத்தை அமுல்படுத்தாத கூட்டுறவுச்சங்கங்கள் இவ்விடைக்காலக் கொடுப்பனவுக்கு விண்ணப்பிக்க முடியாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்நிபந்தனையை தற்பொழுது வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு தளர்த்தியுள்ளதாக அதன் செயலாளர் அறியத்தந்துள்ளார்.

இதன் பிரகாரம் 31/99ம் இலக்க சுற்றுநிருபத்துக்கு அமைவாக புதிய சம்பளத் திட்டத்தை இதுவரை அமுல்படுத்தாத சங்கங்களும் கூட்டுறவு ஊழியர் நடைமுறை விதிகளுக்கமைய நியமனம் செய்யப்பட்ட தற்காலிக, அமைய, ஒப்பந்த ஊழியர்களுக்கும் இவ்விடைக்காலப்படியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எனினும், இதனை வழங்கும்போது 50/2000 இலக்க சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டிருந்த ஏனைய அறிவுறுத்தல்கள் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும்.

இவ்விடைக்காலக் கொடுப்பனவுகள் மாதாந்தம் கணக்குகள் தயாரிக்கப்பட்டு இயக்குநர் சபைக்கு சமர்ப்பித்து கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் வழங்குதல் வேண்டும்.

அத்துடன் அனைத்துச் சங்கங்களும் 31/99 இலக்க சுற்றுநிருபத்தை அமுல்படுத்துவதற்கு ஏதுவாக ஆளணி அனுமதியைப் பெற்று ஊழியர்களுக்கான பதவிநிர்ணயத்தைப் பெற்றுக் கொள்ள விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆ. சுப்பிரமணிய சர்மா,
கூ. அ. ஆணையாளரும்,
கூ. ச. பதிவாளரும் (வகி).

பிரதி: 1) கூ. அ. உ. ஆணையாளர், ..................

- நடவடிக்கைக்காக.